பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

PASCAL
217/A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவைக்கு அருகாமை)
பொருளியல்
Mr. சின்னத்தம்பி
கணக்கியல்
Mr. மரியதாஸ்
வர்த்தகம்
Mr. ரட்ணம்/Mr. தேவா
அளவையியல்
Mr. புகபாலசிங்கம்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ 2/.

PASCAL
217/A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவைக்கு அருகாமை)
வர்த்தக வகுப்புகள்:
A/L 90
ஆரம்பமாகியுள்ளது.
A/L 89
பிரிவு II ஆரம்பம்:
24-8-88
6-30 a. m. (புதன்)

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ ஆவணி ௴ 07 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 முஹர்ரம் பிறை 09 (23 08 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 164

## குடாநாட்டிற்கு எரிபொருள்கள் கொண்டுவர கட்டுப்பாடு

### உடனடியாக அமுலுக்கு வருவதாக அமைதிப்படை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 23

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு, அமைதிப்படையினரின் முன் அனுமதி பெறுமல் தனியார், தனிப்பட்டவர் எவரும் எரிபொருள் கொண்டு வர முடியாது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூலமே எரிபொருள் கொண்டு வரப்படும்.

இந்த நடைமுறை உடனடியாக அமுலுக்கு வருவதாக அமைதிப் படையின் நகரக் கொமாண்டர் அலுவலகம் நேற்று விடுத்த பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ். நகரக்கொமாண்டர் நேற்று விடுத்த பத்திரிகை அறிக்கை விபரம் வருமாறு:—

இந்தத் தலைமை அலுவலகத்தின் முன் அனுமதிபெறுமல் தனியாரோ அல்லது தனிப்பட்டவரோ டீசல் அல்லது பெற்றோல் (சுப்பர்) கொண்டுவர முடியாது. இது உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப் படுகிறது.

தமது சொந்தப் பாவனைக்குத் தேவையானதை விட மேலதிகமாகவோ அல்லது கூடுதலாகவோ டீசல், பெற்றோல் ஆகியவற்றைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் நேற்றுத் துக்கதினம்

யாழ்ப்பாணம் ஆக 23

தென்மராட்சிப் பகுதி எங்கும் நேற்று துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இத்தாவிலில் மரணமான தமிழீழ விடுதலைப் புலிகளின் பளைப் பகுதிப் பொறுப்பாளர் சமுத்திரனுக்கு (திருமலை) அஞ்சலி செலுத்தும் முகமாகவே நேற்று தென்மராட்சி எங்கும் துக்க தினம் அனுஷ்டிக்கப் பட்டது.

சாவகச்சேரியில் இருந்து பளைவரை உள்ள அனைத்துக் கடைகளும் நேற்று மூடப்பட்டிருந்தன.

முக்கிய சந்திகளில் சோக கீதங்கள் ஒலிபரப் பப்பட்டன.

மரணமான இளைஞரின் சடலம் பளை சந்தைப் பகுதியில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இப் பாதையூடாக போக்குவரத்து மேற்கொண்ட அனைத்து வாகனங்களும் நிறுத்தப்பட்டு பயணிகள் பூதவுடலுக்கு அஞ்சலி தெரிவித்தனர்.

கொடிகாமம் சாவகச்சேரி சந்தைகள் இயங்கவில்லை.

தென்மராட்சிப் பகுதியில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்ட பொழுதும் பளையில் அஞ்சலி நடைபெற்ற பொழுதும் இந்திய அமைதிப் படையினர் எதுவித இடை

(6ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர் கொல்லப்பட்டதை ஆட்சேபித்து

## யாழ் சென். பற்றிக்ஸ் ஆசிரியர், மாணவர் நடத்திய ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஆக 23

யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் நேற்று ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அசம்பாவிதத்தின் போது மரணமடைந்த இக்கல்லூரியின் ஆசிரியர் உட்பட மூவர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இந்தச் சம்பவத்தை ஆட்சேபித்தே இந்த ஊர்வலம் இடம்பெற்றது.

நேற்றுக்காலை பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியரின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள், பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டவுடன்–

கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இருந்து ஊர்வலத்தை தொடர்ந்தனர்.

அங்கிருந்து ஊர்வலம் பிரதான வீதி - கோயில் வீதி - ஆஸ்பத்திரிவீதி கண்டி வீதி வழியாக செயலகத்தை அடைந்தது.

செயலகத்தின் வாசலில் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்

பின்னர் அரச அதிபர் வெளியே வந்து அவர்களை சந்தித்தார்.

அப்போது அரச அதிபரிடம் ஆசிரியர் மாணவர்களினால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. (ச–9)

## யாழ் கச்சேரி அருகே நேற்று கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம், ஆக. 23

கண்டிவீதி — ஆஸ்பத்திரிவீதிச்சந்தியில் (கச்சேரியருகில்) வைத்து நேற்றுக்காலை அமைதிப் படை வாகனம் ஒன்றினுள் கிரனேட் போடப்பட்டது. ஆனுல் அது வெடிக்கவில்லை.

அதன்பின்னர் அமைதிப்படையினர் அதை வெடிக்கச் செய்ததாகவும் கூறப்பட்டது.

கிரனேட் வீச்சைத் தொடர்ந்து அந்தப் பகுதியால் சென்ற அனைவரும் அமைதிப்படையினரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (ஒ–ச–9)

## வியாழனன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக 23

எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை வடக்கு, கிழக்கு பகுதி எங்கும் பூரண ஹர்த்தால் நடத்தும்படி வடக்கு-கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழு அறிக்கை மூலம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது

பின்வரும் விடயங்களை முன் வைத்தே இந்த ஹர்த்தாலை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

★ தமிழ் மக்கள் கைது செய்யப்படுதல், தாக்கப்படுதல், தடுத்து வைக்கப்படுதல்—

★ தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளப் படுவதைத் தடுக்க இந்திய அரசு தவறியமை—

★ ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓராண்டு முடிந்தும்தடுப்புக்காவல் கைதிகள் விடுவிக்கப் படாமை—

★ வன்னிப் பகுதி தேடுதலினுல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளமை-

★ கடல்வலயத் தடையினுல் மீனவர் பாதிக்கப்பட்டுள்ளமை-

ஆகியவற்றை ஆட்சேபித்தும்—

★ யுத்த நிறுத்தத்தை அமுல் நடத்தக் கோரியுமே—

இந்த ஹர்த்தாலுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. (உ–ச–9)

இனரீதியில் துன்புறுத்தலில்லை; ஆகவே

## தமிழர் மேற்கு ஜேர்மனியில் தஞ்சம் கோர உரிமையில்லை!

### நீதிமன்றத்தின் தீர்ப்பு இது!!

பொன், ஆக. 22

இலங்கையின் வடக்கு, தெற்குப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் இனரீதியில் துன்புறுத்தப்படவில்லை, ஆகவே அவர்கள் மேற்குஜேர்மனியில் தஞ்சம் கோர உரிமையில்லை.

—இப்படி மேற்கு ஜேர்மனியின் கொலோன நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

இரண்டு தமிழருக்குத் தஞ்சம் வழங்கும் முடிவுக்கு எதிராகச் சமஷ்டி ஆணையாளர் செய்து கொண்ட மேன்முறையீட்டை விசாரித்த பின்னரே முன்கண்ட தீர்ப்பு அளிக்கப்பட்டது.

முதல் வழக்கு வடபகுதியைச் சேர்ந்த தமிழர் ஒருவர் சம்பந்தப்பட்டது. இனரீதியான இலங்கை இராணுவத் தாக்குதலுக்குத் தான் ஆளாகியதாக இவர் முறையிட்டிருந்தார்.

இரண்டாவது வழக்கு தென்பகுதியில் வாழும் தமிழர் ஒருவர்சம்பந்தப்பட்டது.

1983 இல் தென் இலங்கையில் சிங்களவரின் இனரீதியான தாக்குதலுக்குத் தான் ஆளானதாக முறையிட்டிருந்தார்.

இரண்டு பேருக்கும் தஞ்சம்வழங்க, அகதிகள் பிரிவுதீர்மானித்தது.

அதை எதிர்த்தே சமஷ்டி ஆணையாளர் மேன்முறையீட்டைச் செய்திருந்தார்.

கடந்த வெள்ளி வழங்கப்பட்ட தீர்ப்பில் – தென் கொலோனில் உள்ள கொப்ளென்ஸ் மேல் நிர்வாகநீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை இந்தத் தீர்ப்பை வழங்கியது. (உ–ஓ–எ)

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து

## இயக்கச்சிப் பகுதியில் நேற்றுத் தேடுதல்

யாழ்ப்பாணம், ஆக 23

இயக்கச்சி காட்டுப் பகுதி படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு நேற்று திங்கட்கிழமை தேடப்பட்டது.

நேற்று முன்தினம் இயக்கச்சிக்கும் புதுக்காட்டுக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றை அடுத்தே இப் பகுதி சுற்றிவளைக்கப் பட்டது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினுல் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி ஊர்ஜிதப் படுத்தப்பட்ட செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

23 - 08 - 88
ஆவணி — 07
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.35முதல் 12.05வரை
ராகுகாலம்:
03.05முதல் 04.35வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

### முச்சந்தி முரளி



மக்களைக் கொல்லுறதில இமாலய பூமியதிர்ச்சி இமாலய சாதனை படைச்சிட்டுது கண்டியளே....!

நேற்று நண்பகல் 2 மணி முதல்

## முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊரடங்கு; தேடுதல் தீவிரம்

யாழ்ப்பாணம் ஆ. 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று இரண்டு மணி முதல் மறு அறிவித்தல் வரை ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப் பட்டுள்ளது.

வெளி மாவட்டங்களில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் செல்வதும் தடை செய்யப் பட்டுள்ளது.

மாங்குளம்– முல்லைத்தீவு பிரதான வீதியில் இந்திய அமைதிப்படையினர் முட்கம்பிகளால் வேலி அமைத்து பாதையைத் தடை செய்துள்ளனர்.

அதே போல் பரந்தன் சுதந்திரபுரம் ஊடாக முல்லைத்தீவுக்கு செல்லும் பாதையும் தடை செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் எங்கும் பரவலாக இந்தியப்படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை மும்முரமாக்கப்பட்டிருக்கிறது.

நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவுக்கு சென்ற எல்லா வாகனங்களும் கிளிநொச்சி சுதந்திரபுரத்துடன் திருப்பி அனுப்பப்பட்டன. (உ–10–9)

### வேலூரில் 18 பேர் பலி

சென்னை, ஆக. 23

வேலூரில் நடந்த விபத்து ஒன்றில் 18பேர் உயிரிழந்தனர்.

பஸ்ஸொன்றுக்காக வீதி ஓரத்தில் காத்துக் கொண்டு நின்ற கூட்டம் ஒன்றின் மீது லொறி மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டது. (உ–எ)

## ரூ. 65 லட்சம் பணம், நகை பிஹன வங்கியில் கொள்ளை

கொழும்பு, ஆக. 23

35 லட்சம் ரூபா ரொக்கப் பணமும், 30 லட்சம் ரூபா பெறுமதியுடைய நகைகளும் கண்டி மாவட்டத்தில் உள்ள பிஹன மக்கள் வங்கிக் கிளையிலிருந்து நேற்று கொள்ளையடிக்கப்பட்டன.

பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தவர்களிடமிருந்து 2 ஷொட்கன்களும் அபகரித்துச் செல்லப்பட்டன.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இரண்டு வாகனங்களில் வந்த இனந்தெரியாத சிலர் இந்தக் கொள்ளையை நடத்தியிருக்கின்றனர். (உ)

## படையினர் நடவடிக்கை பீதியைத் தருகிறது

### பிரசைகள் குழு ராஜீவுக்கு மகஜர்

தமிழ் மக்களை காப்பாற்றுவதற்காகவும், உதவுவதற்காகவும் அனுப்பி வைக்கப்பட்ட இந்திய அமைதிப்படை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துக் கொண்டு அப்பாவிப் பொதுமக்களைத் துன்புறுத்துகிறது; சித்திரவதை செய்கிறது; உயிரிழப்புகளை ஏற்படுத்துகிறது. இது எமக்கு மிகுந்த பயத்தையும் பீதியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ் பிரசைகள் குழு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் இப்படி அச்சம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 17, 18 ஆம் திகதிகளில் யாழ் நகரில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப்படை ஜவான் இணுவிலில் பலி!

கொழும்பு, ஆக. 23

இணுவிலில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இந்திய அமைதிப்படை ஜவான் ஒருவர் கொல்லப்பட்டார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'லங்கா புவத்' இத்தகவலைத் தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தில் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ)

### கோப்பாயில் நேற்றும் வீதித்தடை!

கோப்பாய், ஆக. 22

யாழ்.-பருத்தித்துறை வீதியில் கோப்பாயில் இருந்து புத்தூர் வரை உள்ள பகுதியில் வாகனப் போக்குவரத்து நேற்றும் தடைசெய்யப் பட்டிருந்தது.

இப்பகுதியில் இராணுவ நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

இப்பகுதியூடான போக்குவரத்துக்கள் கோப்பாய் சந்தியுடன் திருப்பப்பட்டு வயாவிளான் ஊடாக திருப்பி விடப்பட்டன.

இதேபோல் பருத்தித்துறை, அச்சுவேலிப் பகுதியில் இருந்து வந்த வாகனங்கள் புத்தூர் சந்தியுடன் திருப்பப் பட்டு நிலாவரை, வயாவிளான் ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன. (உ 10-72)

## இந்திய அமைதிப்படை இங்கு இருக்கும் வரை இது சுதந்திர நாடு இல்லை

### சிறிமாவோ கூறுகிறுர்

கொழும்பு ஆக 23

இந்திய அமைதிப் படை இங்கு இருக்கும் வரை இலங்கையை சுதந்திர நாடு என்று கூற முடியாது.

–சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அத்தனகல்லையில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது; தற்போதைய அரசு பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட போது நாடு இன்றுள்ள நிலைக்கு வரும் என்று எவரும் எண்ணிப் பார்க்கவில்லை

இன்று மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர்; வலிமையான அரசுத் தலைமை இல்லை.

இந்த நிலைமையை நீடிக்கவிட்டால் வருங்காலத் தலைமுறை நம்மைத் திட்டும்.

தேர்தலை எதிர்பார்த்து மக்கள் பொறுமையுடன் உள்ளனர்.

பதவியில் இருப்பதற்காக அரசு எல்லாரையும் கொலை செய்ய முடியாது. மக்கள் பொறுமையை இழக்கும் முன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இமாலய பூமியதிர்ச்சி; 1,000பேர் பலியாகினர்

புதுடில்லி, ஆக. 23

இமாலயத்தைச் சுற்றியுள்ள நாடுகளில் கடந்த ஞாயிறு ஏற்பட்ட வலுவான பூமியதிர்ச்சியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நேபாளத்தில் மட்டும் 550 பேர் உயிரிழந்தனர் என்றும் இந்தியாவின் பீஹார் மாநிலத்தில்450 பேர் உயிரிழந்தனர் என்றும் அதிகார பூர்வமற்ற தகவல்கள் தெரிவித்தன. (உ–எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் ஸ்ரீல் அலுமாரி, தேக்கு அலுமாரி, கட்டில் மெத்தைகள், விருக்கை கதிரைகள், கண்ணாடி மேசைகள், Hall set, Oven, சாப்பாட்டு மேசைகள், குத்துவிளக்கு மற்றும் பலவித பொருட்களும் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜா 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சென் பற்றிக்ஸ் சந்தி அருகில்) (5843)

## வலம்புரிச் சங்கு விற்பனைக்கு

வலம்புரிச் சங்கை வீட்டில் வைத்து ஆராதிப்பதால் சகல சௌபாக்கியங்களும் பெருகி சுபீட்சம் உண்டாகும். கோவில் தேவைக்குரிய அளவிலும் உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். T. உருத்திரகோடீஸ்வரக் குருக்கள், பிள்ளையார் கோவில் வீதி, கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை. (5923)

## திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேஷ கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

## மைசூர் No. 1 அரிசி விற்பனை

மிகவும் கைதேர்ந்த தொழிலாளர்களால் சுகாதார முறைப்படி அதிநவீன இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது No 1 அரிசி. சகலதேவைகளுக்கும் கல் இல்லாத சுத்தம், சுவை, தரம் நிறைந்த மைசூர் No 1 அரிசியையே உங்கள் அருகாமையிலுள்ள கடைகளில் வாங்கிப் பாவியுங்கள். தயாரிப்பாளர்: மைசூர் அரிசி ஆலை, சுதுமலை, மானிப்பாய். (5807)

## Dolly Tea டொலி தேயிலை

அதிக சுவை, கூடிய சாயம், நறுமணம். இலவச ஸ்ரிக்கர் இத்துடன் கிடைக்கும் உடனே நாடுங்கள்:- டொலி தேயிலை, மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் விலாசம்:- டொலி, கல்வயல் வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (5660)

## தேவை

யாழ் நகர எல்லைக்குள் கைத்தொழிற்சாலைக்கு தொழிலாளர் தேவை. உடல் ஊனமுற்றவர்கட்கு முன்னுரிமை அளிக்கப்படும் 336, C/o உதயன், யாழ்ப்பாணம். (5920)

மல்லாகம் சந்தியில் அமைந்துள்ள வெளிநாட்டு ஏஜன்சி நிறுவனத்திற்கு பெண் இலிகிதர் தேவை. நற்சான்றிதழுடன் விண்ணப்பிக்க. ஆங்கில அறிவுள்ளவராக இருத்தல் வேண்டும். முடிவுத்திகதி 27-8-88. முகவரி P. இராமநாதன், குரு வீதி, காங்கேசன்துறை. [5924]

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்/மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. [யாழ்/இந்து ஆரம்பபாடசாலை யாழ்/இந்துக்கல்லூரி சுற்றுடலில் விரும்பத்தக்கது.] 337, C/o உதயன், யாழ்ப்பாணம். (5925)

## பெண் ஆசிரியை தேவை

6ஆம் ஆண்டு தரத்திலிருந்து விஞ்ஞானம் கணிதம் (Maths) ஆங்கிலம், தமிழ் - வீட்டில் வந்து ஒரு மாணவனுக்குப் படிப்பிக்க பெண் ஆசிரியை தேவை. பிற்பகல் 2.00 மணியிலிருந்து 4.00 மணிமட்டும் நேரில் வரவும். திருமதி. S.R. விஜயரெத்தினம், 53, கோவில் வீதி (புகையிரத வீதிக்கருகில்) யாழ்ப்பாணம். (5956)

## மணமகன் தேவை

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த (வயது 26) 12இல் செவ்வாய்க் குற்றமுள்ள (கிரகபாவம் 38) பெண்ணிற்கு டாக்டர், என்ஜினியர், கணக்காளர் உடன் தேவை. இலங்கையில் வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: மாங்கல்யா திருமண சேவை. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (5921)

## வகுப்புகள்

Radio, T. V, Air-condtioning, Refrigeratoin, Draftsmen வயறிங், வெல்டிங், வைண்டிங், பிளம்பிங், மோட்டார் மெக்கானிக் Typing, Spoken English மீண்டும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த பொறியியல் நிபுணர்களால் கற்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa, Engineering Aid Hall, 328, நாவலர் வீதி, [ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (59'8

## SPOKEN ENGLISH with Grammar

வெள்ளி தவிர்ந்த ஏனைய ஆறு நாட்களும் நேரம்: மாலை 7 30-8 30 ஆரம்பம் 27-08-88. தூர இடங்களில் இருந்து வருவோர்க்கு இருமணித்தியால வகுப்பு திங்கள், புதன் நாட்களில் காலை 10.30 -12 30. ஆரம்பம்: 29-08-88. தொடர்பு: S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். ( 5849 )

## DIPLOMA IN NURSING தாதியர் பயிற்சி

இரண்டாம்பிரிவு வகுப்புக்கள் தருதிவாய்ந்த டாக்டர்களினால் செப்டம்பரில் ஆரம்பம் விபரங்களுக்கு:- எலெற் ரியூசன் சென்ரர், மானிப்பாய் அல்லது நவீன வைத்தியசாலை உடுவில் காலை 9முதல் 11 மணிவரை தொடர்பு கொள்ளவும். (5954)

## யாழ். சைனீஸ் றெஸ்ரோறென்ற்

எங்கள் ஸ்தாபனம் தினசரி பிற்பகல் 5.30 வரை திறந்திருக்கும். தங்குமிட வசதியும் உண்டு. யாழ். சைனீஸ் றெஸ்ரோறென்ற் பிறைவேற் லிமிட்டெட் முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (5917)

## செயல்நூல் வெளியீடு

தமிழ்-ஆண்டு2 (10/-) கணிதம்-ஆண்டு1 (10/-) கணிதம்-ஆண்டு2 (13/-) சிறுவர்களுக்கானசிறந்த பயிற்சி நூல் பெற்றுக் கொள்ள, திருமதி P. தம்பிராசா "காணன்" நவாலி கிழக்கு மானிப்பாய். மேலதிக விபரங்கட்கு 145, நவீனசந்தை யாழ்ப்பாணம். (5908)

## தவறிவிட்டது

சோ.சதீஸ்வரன் ஆகிய எனது அடையாள அட்டை இல680817086V தவறிவிட்டது. தயவு செய்து இதைக் கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5958)

எனது சாரதி லைசென்ஸும் இரு அடையாள அட்டைகளும் மற்றும் முக்கிய விபரங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகள் என்பன தவறிவிட்டன. தயவுசெய்து நேரடியாகவோ தபாலிலோ அனுப்பிவைக்கவும். தொடர்பு: க. திருநாவுக்கரசு, முகுந்தன் இல்லம், வயாவிளான். (5850)

வன்னிச்சி கோவிலடி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த துரைச்சாமி நிர்மலாதேவி சகோதரிகளினது அடையாளஅட்டைகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழேயுள்ள விலாசத்திற்கு ஒப்படைக்கவும் திருமதி தே. தயாபரராசா, 34, ஆசிர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (5952)

A புஸ்பமாலா அடையாளஅட்டை இல. 656122013V உம், M. குமுதினி அடையாள அட்டை இல. 686361411V இரண்டும் ஒரு பேர்ஸில் போட்டபடி நாச்சிமார் கோவிலடியில் K. K. S ரோட்டில் தவறிவிட்டது. இதைக்கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5957)

## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த

**திருமதி நாகேந்திரம் பாக்கியம்**

பிறப்பு: 16-3-1917 — இறப்பு: 3-8 1988

இவர் காலஞ்சென்ற முருகேசு - நாகேந்திரத்தின் அன்பு மனைவியும் செல்வரத்தினம் (வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்), நாராயணன் (நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை இரத்மலானை) மகாலக்சுமி, முத்துலக்சுமி ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற பரமநாதர் (கல்கமுவா ஸ்ரோர்ஸ் பங்காளர்) த. நவரத்தினம் (V. R. தம்பிப்பிள்ளை பங்காளர் கிளிநொச்சி) மனோன்மணி, இந்திராதேவி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அவருடைய அந்தியேட்டியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று நடைபெற இருப்பதனால் அதில் கலந்து சிறப்பித்துச் செல்லுமாறு வேண்டிக் கொள்கிறோம். அத்துடன் அவருடைய மரணச்சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எங்கள் யாபேருடைய நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளை.

[C 6305]

## 96ஆவது நாள் கண்ணீர் நினைவஞ்சலி



தாயகத்தில் 25 08- 1961

தியாகத்தில் 20- 5- 1988

ரமேஸ் மாஸ்டர்

**பொ. சிவஞானசுந்தரம்**

(வேங்கைகளின் அரசியல் பொறுப்பாளர்)

"இலட்சிய வேங்கைகள் இறப்பதும் இல்லை
வீர வேங்கைகள் வீழ்வதும் இல்லை"

குறிப்பு: இன்று அவரது இல்லத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறுகின்றன. மற்றும் அவரது பிரிவுத்துயரில்பங்கேற்றுக்கொண்ட யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

பொலிகண்டி. (5891)

## உணவு முத்திரை நாளை விநியோகம்

மானிப்பாய் ஆகஸ்ட் 23

இந்த வருடம் ஏப்ரல் மாதம் முப்பத்தொராம் திகதிக்கு முன்பாகப் பிறந்த குழந்தைகளுக்கான உணவு முத்திரைகள் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வழங்கப்படவுள்ளன. சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பிரிவினர்களுக்குரிய குழந்தைகளுக்கான இலவச உணவு முத்திரைகள் நாளை புதன்கிழமை காலை 9 மணிமுதல் பகல் ஒரு மணிவரையில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்படும்.

குழந்தைகளுக்கான இலவச உணவு முத்திரைகளைப் பெறவேண்டியவர்கள் குழந்தையினுடையபிறப்புச்சான்றிதழ் குழந்தைக்கு சுகாதார இலாகாவினால் வழங்கப்பட்ட தடுப்பூசி போட்டமைக்கான சான்றிதழ், பெற்றோர்களுடைய இலவச உணவு முத்திரைகள், தேசிய அடையாள அட்டைகள் ஆகியவற்றுடன் அன்றைய தினம் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-90)

## இடையில் தடைப்பட்ட கூட்டம்

பண்டத்தரிப்பு ஆக 23

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம்இடையில் ஒத்திவைக்கப்பட்டது.

அப்பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பே இதற்குக்காரணமாகும். (ஒ-120)

## விசேட பஸ்சேவை

கரவெட்டி, ஆக. 23

"நெல்லியடி மினிபஸ் சங்கம்" நெல்லியடியில் இருந்து விசேட சேவையை ஆரம்பித்துள்ளது.

அதிகாலையில் பெருந்தொகையான தொழிலாளிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள், மாணவர்கள், போக்குவரத்தின் சிரமத்தை அனுபவித்து வருவதினால்-

நெல்லியடியில் இருந்து காலை 6.55, 7.05, 7.20 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கு என விசேட தனியார் பஸ்கள் கடந்த 15ஆம் திகதி முதல் சேவையில் ஈடுபட்டுள்ளன. (சி-70)

## சிறுவர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

கோப்பாய், ஆக 23

கைதடி அறவழி சிறுவர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதில் பச்சை இல்லம் முதல் இடத்தையும் சிவப்பு இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றது.

பிரதம விருந்தினராக பனம் பொருள் அபிவிருத்திச்சபையின் செயலாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி இதில் கலந்து கொண்டார். (ஜ 72)

## விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், ஆக. 23

சுவாமி சிவானந்தரின் நினைவு தினத்தை ஒட்டி சிவானந்த மாதர் சங்கம் யாழ்- திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் சிறுவர் விளையாட்டுப்போட்டி ஒன்றை நடத்தியது.

சிவானந்த சிறுவர் பாடசாலை மாணவர்களும் யாழ்-சச்சிதானந்த சிறுவர் சங்கக் குழந்தைகளும் இதில் கலந்து கொண்டனர்.

திருமதி க. சூரசங்காரம் தலைமை வகித்தார். (உ-எ)

## தேவை

யாழ்/ இந்து வேளாளகுல நற்குணமும் பண்பும் அழகும் A/L படித்த 5' 5'' 29வயது மணப்பெண்ணுக்குப் பெற்றோர் அரசாங்க, வங்கி, கூட்டுத்தாபனத்தில் நல்ல பதவி வகிக்கும் தீயபழக்கமற்ற நற்குணமுள்ள மணமகனைத் தேடுகிறார்கள். தனியார்ஸ்தாபனத்தில் வேலைபார்க்கும் Accountants, Engineers உம் விண்ணப்பிக்கலாம். புதிய வசதியுள்ளவீடு உட்பட தகுந்த சீதனம் கொடுக்கப்படும். குடும்ப- உத்தியோக- வருமான- விபரங்களுடன் சாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். இல 339 C/o உதயன். (5892)

## விற்பனைக்கு

32' நீளமுள்ள 3½ தொன் வள்ளம் 41 - H.P லிஸ்டர் "எயர் கூல்" இயந்திரம் பூட்டியது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

வ நவரத்தினம்
இன்பருட்டி
பருத்தித்துறை.
(5876)

# VACANCIES IN SAUDI ARABIA

GOLDEN TRAVELS & TOURS

1. Work Scheduler SR 1100+100 FA
2. H v a c Split Units, Central Technicians SR 900-1000 + 100 FA
3. A/C Technicians SR 700-800+ 100 FA
4. Appliances Technicians SR 800 +100 FA

ஆங்கில அறிவும் Driving Licence உம் அவசியம் வேண்டும்.

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

பிரயாணம் செய்யக் கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்ட பின் பிரயாணம் செய்யத்தவறின் கடவுச்சீட்டுத் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

காரியாலயங்கள் அனைத்தும் செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8-30 மணி முதல் மாலை 5.30 மணி வரையும் திறக்கப்படும்.

தலைமைக் காரியாலயம்:-

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

கிளை 1: கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ் குப்பிளான் சந்தி, குப்பிளான்.

கிளை 2: கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ் வன்னிச்சி கோவிலடி, வல்வெட்டி.

A. P. புலேந்திரராசா J 0377456
3 ஆம் வட்டாரம், புங்குடுதீவு
உடனடியாகக் காரியாலயத்தில் வந்து சந்திக்கவும்.

(C 6320)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசம்பாவிதங்களினுல் பாதிப்படைந்த

## விவசாயிகளுக்கு புனர் வாழ்வளிக்க ஏற்பாடு

மானிப்பாய் ஆக 23 அண்மைக்-கால அசம்பாவிதங்கள் காரணமாக பாதிப்படைந்த விவசாயிகளுக்கான புனர் வாழ்வு மற்றும் பொருளாதார முயற்சியில் ஈடுபடுவதற்கான நிதி உதவி ஆகியவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடுவில் கமநல சேவை நிலையத்தினர் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட எட்டுக் கிராமங்கள் வலிகாமம் தென் மேற்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் குட்பட்ட ஐந்து கிராமங்கள் ஆகிய 13 கிராமத்து விவசாயிகளுக்கான நிவாரண நிதி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதில் உடுவில் கமநல சேவை நிலைய ஊழியர்கள் வேகமாகச் செயற்பட்டு வருகின்றனர். (ஒ-90)

### தங்கச் சந்தை

கொழும்பு, ஆக. 23 நகைவியாபாரிகளுக்கு நியாயமான விலையில் தங்கம் விற்பனை செய்யப்படுவதற்கு ஏதுவாக தங்கச் சந்தை ஒன்றை தீர்வையற்ற தங்க விற்பனை நிலையத்தில் மட்டும் நடத்துவது என்று கொள்கையளவில் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கள்ளச் சந்தையில் தங்கம் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கையாக இது அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ- எ)

### மீண்டும் இயங்குகிறது

நீண்ட இடைவெளியின் பின் மீண்டும்கரவை சனசமூகநிலையம் இயங்க ஆரம்பித்துள்ளது.

மாமுனை மாதிரித் தோட்டத்திலிருந்து

## 50ஆயிரம்பனைமரநாற்றுக்கள் மானியமாக வழங்கப்படும்

வேலணை- ஆக- 23 பனை அபிவிருத்திச் சனபயினுல் நடாத்தப்படும் மாமுனை மாதிரிப் பனந்தோட்டத்தில் இவ்வருடம் 50 ஆயிரம் பனைமர நாற்றுக்களை உற்பத்தி செய்ய பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்திப் பிரிவு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அடுத்த வருட பனை நடுகைக்காக- இந்த நாற்றுக்கள்- காணிச் சொந்தக் காரர்களுக்கு மானியமாக வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளதாகவும் சபையின் உற்பத்திப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பனை மரங்கள் இல்லாமல் பனை அபிவிருத்திச் சபையோ, பனைப் பொருள் உற்பத்தியாளர்களோ இயங்க முடியாது. இதனாலேயே மூலவளமான பனைவளம் வருடா வருடம் புனர் நடுகை மூலம் பாதுகாக்கப்படுகிறது என்றும் அவர் சொன்னார்.

உலக உணவு விவசாய நிறுவனம் வழங்கும் நிதி உதவி மூலமே பனை நடுகைக்கு பயன் படுத்தப்பட்டு வருகின்றது என்றும்-

புனர் நடுகை மூலம் பனை வளத்தை ஓரளவு பாதுகாக்க முடியும் என்றும் அவர் சொன்னார். (உ-167)

### பனை ம. வியிலிருந்து பல்கலைக் கழகத்துக்கு தெரிவானோர்

கொடிகாமம், ஆக. 22 பல்கலைக்கழகத்துக்கு பனை மகாவித்தியாலயத்திலிருந்து பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கலை:-க. கருணாகரன்

முகாமைத்துவம்: க.சண்முகநாதன்.

உயிரியல் விஞ்ஞானம்:- க. யோகேஸ்வரி மு. சருணாகரன்.

மருத்துவம்:- த. விக்னேஸ்வரன், க. வதனலீலா. (ஐ- 75)



முல்லை மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

முல்லைத்தீவு மகாவித்தியாலயம் கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து முதலாவது இடத்தைப் பெற்றது. இதற்கான வெற்றிக் கேடயத்தை முல்லைத்தீவு மத்திய மகாவித்தியாலய கப்டன் மா. நவரத்தினத்திடம் முல்லைத்தீவு பிரதேச கல்விப் பணிப்பாளர் கலாநிதி செல்வி ஜீ. சி. இராசரத்தினம் வழங்கும் போது எடுக்கப்பட்ட படம். (படம்: முல்லைத்தீவு செய்தியாளர்) (இ-92)

### அமைதிப் படையினர் திருத்தினர்

வடமராட்சி, ஆக. 23 ஸ்ரீலங்கா இராணுவத்தினரினுல் சேதமாக்கப்பட்ட தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சுற்றுடலில் உள்ள மலசல கூடங்களை இந்திய அமைதிப்படையினர் திருத்தம் செய்து மக்களின் பாவிப்பிற்காக விட்டுள்ளார்கள்.

மேலும் ஆலயங்களின் சுற்றுடலில் பக்தர்களின் வழிபாட்டை முன்னிட்டு ஊரடங்கில் சில சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளது. (ஒ-சி-160)

நடுக்கடலில் மயங்கிய

## தலைமன்னார் மீனவரை கரைசேர்த்த இந்தியப் படகு

நெடுந்தீவு ஆக- 23 தலைமன்னார் பியர் புனித அந்தோனியார் கோவிலடியைச் சேர்ந்த இரு மீனவர்களைக் காப்பாற்றிய இந்திய இழுவைப்படகொன்று அவர்களை நெடுந்தீவில் கரை சேர்த்தது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது: திரு. பால்ராஜ், திரு. கே.எம்.எவ். பவுளி ஆகிய இரு மீனவர்களும் மீன்பிடிக்க தமது சிறிய பிளாஸ்ரிக் படகில்சென்றனர். அவர்கள் சென்ற படகு நடுக் கடலில் பழுதடைந்ததைத் தொடர்ந்து காற்றினதும் கடல் கொந்தளிப்பினாலும் அலைந்து கொண்டிருந்ததாம்.

சுமார் ஐந்து நாட்கள் வரை படகு நீரோட்டத்துடன் இழுபட்டுச் சென்றுகொண்டிருந்ததாம்.

இக்காலத்தில் உணவு குடிநீரின்றிக் கஷ்டப்பட்ட இருவரும் தாம் பிடித்த மீன்களைப் பச்சையாக உண்டும் கடல் நீரைக் குடித்தும் தமது பசி தாகத்தைத் தீர்க்க முயன்றனராம்.

போதிய உணவு நீர் என்பன இல்லாமையால் இருவரும் மயக்க நிலையில் காணப்பட்டனர்,

இவ்வேளையில் மீன் பிடிக்க வந்த இந்திய இழுவைப் படகொன்று இவர்களின் அவல நிலையைக் கண்ணுற்று விரைந்து குறிப்பிட்ட மீன்பிடிப்படகை இழுத்துக்கொண்டுவந்து நெடுந்தீவில் கரைசேர்த்தது.

நெடுந்தீவு பிரஜைகள் குழு எடுத்த நடவடிக்கையை அடுத்து நெடுந்தீவு வண பிதா ஜெரோம் லம்பேட் சம்பந்தப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுக்குத் தகவல் அனுப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-111)

தாயகம் திரும்ப விரும்பும்

## ஈழத் தமிழருக்கு இந்திய இராணுவம் பாதுகாப்பு கொடுக்க மறுத்தால் நானே அவர்களை அழைத்துச் செல்வேன்

### சுப்பிரமணிய சுவாமி சொல்கிறார்

சென்னை, ஆக 22 ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப இந்திய இராணுவம் பாதுகாப்பு தராவிடில், நானே படகில் ஏற்றி, அவர்களை அழைத்துச் செல்வேன். அதற்கான திகதியை பின்னர் அறிவிப்பேன். இவ்வாறு டாக்டர் சுப்பிரமணிய சுவாமி கூறினார்.

ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் சுப்பிரமணிய சுவாமி சென்னையில் செய்தியாளர்களுக்குப் பேட்டிஅளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அப்போது அவர் சொன்னதாவது:-

இலங்கை- திருகோணமலையில் இருந்து வந்த 27 அகதிக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மீண்டும் அங்கு போகத் தயாராக இருக்கிறார்கள்.

படகுகளில் போக அவர்கள் பாதுகாப்புக் கேட்டு இருக்கிறார்கள்.

ஆனால் இந்திய இராணுவம் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க மறுத்து விட்டது.

செப்டம்பர் 15க்கு முன்னர் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து அழைத்துச் செல்லாவிட்டால், நானே படகில் ஏற்றி, அவர்களை அழைத்துச் செல்வேன். அதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

என்னுடைய உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கு இந்திய அரசே பொறுப்பு ஏற்க வேண்டும் - இப்படி சுப்பிரமணிய சுவாமி சொன்னார். (ஒ-எ)

## யாழ் மாவட்டத்தில் வீடுகளைப் புனரமைக்க

### கேயர் ஸ்தாபனம் உதவும்

பண்டத்தரிப்பு, ஆக 23 யாழ்ப்பாண மாவட்டத்தில் 75,600 குடும்பங்களுக்கு, அவர்களது அழிந்த வீடுகளை திருத்திக் கொடுக்கவும், சிதைந்த வீடுகளைப் புனரமைத்துக் கொடுக்கவும் அகில இலங்கை கேயர் ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான பணத்தை அவர்களுக்கு நேரில் கொடுத்தால், அவர்கள் வீடுகளைத் திருத்திக் கொள்ள அதனைப் பயன் படுத்தாமல் வேறுதேவைகட்கு பயன்படுத்தும் வாய்ப்புக்களைத் தடுப்பதற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கட்டிட நிர்மாணப் பொருள்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

யாழ். குடாநாட்டில் உள்ள 22 பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுடன் கலந்தாலோசித்து இதற்கான அனுமதியை கேயர் ஸ்தாபனம் பெற்றிருக்கிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொங்கிறீற் கற்கள், கதவு, யன்னல் போன்வற்றறைத் தயாரித்து அவற்றின் மேலதிக வருவாய்க்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (ஐ-120)

### ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஆக.23 யாழ்ப்பாணத்தில் அனேகமான பாடசாலைகள் மூன்றும் தவணைக்காக நேற்று ஆரம்பமாகின. (உ)

87 இல் 6 ஆம் ஆண்டுக்கு நடத்தப்பட்ட

## புலமைப் பரிசில் பெற்ற மாணவருக்கான விண்ணப்பம்

### பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஆக 23 1987 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆறும் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளும் பெற்ற மாணவர்களுக்கான விண்ணப்பப்படிவங்களும். பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இத்தகவலை யாழ் கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி தெரிவித்தார்.

இப் பரீட்சைக்கு 8 ஆயிரத்தி எண்ணூற்றி எண்பத்தி ஒரு மாணவர்கள் தோற்றியிருந்தார்கள் இவர்களில் எழுபத்தொன்பது பேர் உபகாரச் சம்பளம் பெறத் தகுதி பெற்றுள்ளார்கள். நூற்றுப் பதின் மூன்று பேர் தாம் விரும்பிய பாடசாலைகளைப் பெறும் தகுதி பெற்றுள்ளார்கள்.

புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் அவர்களது பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் தாம் விரும்பும் பாடசாலைகளைத் தெரிவு செய்வதற்கான. விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி அதிபரூடாக கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். (ஒ-5)


# PROFESSIONAL COMPUTER STUDIES

1. dBASE III PLUS Classes starting on 24th August at 3 p.m. Fees Rs 2,000/-.
2. WORD PROCESSING Individual Classes starting on any day from 24th August at 3 p.m. Fees Rs.1,500/-.
3. PASCAL and G/W BASIC starting very soon.

Practicals on IBM PC

Contact on week-days only between 2 p.m. and 6 p.m.

R. Karthigesan
C/o. Dr. K. Ramaswamy
Adiyapatham Road,
Thirunelvely East,
JAFFNA. (5825)



திறந்த பல்கலைக் கழகத்தின் பட்டமேல்

# கல்வி டிப்ளோமா

இப் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டோருக்கான

# விசேட பயிற்சி வகுப்புகள்

முன்னணி விரிவுரையாளர்களான
திரு. நல்லையா. திரு. துரைராஜா
திரு. பேனடிக்பாலன்
ஆகியோரின் இணைந்த சேவை

ஆரம்பம்: 3-9-1988

- இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
- வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பிற்பகல் 1-00 மணிமுதல் — 4-00 மணி வரை
- பகுதி I, பகுதி II, ஆகியவற்றிற்கான புதிய பாடத்திட்டங்கள்
- கட்டணம் ரூபா 180.00 (மாதாந்தம்)

விபரங்களுக்கு: நேரில் / தபாலில்

ASTAN INSTITUTE
166/1, Hospital Road, JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)
(C-6264)


## சாவகச்சேரி லயன்ஸ் கழக கடந்த காலப் பணி பாராட்டத்தக்கது!

### புதிய உறுப்பினர் பதவியேற்பு விழாவில் உரை

கொடிகாமம், ஆக. 23 கடந்த வருடம் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட தென்மராட்சிமக்களுக்குச் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் செய்த உதவிகள் பாராட்டத் தக்கதாகும்.

இதேபோல் எதிர்காலத்திலும் புதிய தலைவராகப் பதவிஏற்றுள்ள லயன் வி. பி. தியாகராசாவும் புதிய உறுப்பினர்களும் சிறந்த சேவையாற்றி உலகம் போற்றும் பெருமதிப்பைச்சாவகச்சேரி லயன்ஸ் கழகத்துக்குத் தேடிக் கொடுப்பர் என்பது திண்ணம்.

சாவகச்சேரி லயன்ஸ் கழக (1988-1989)புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்கும்விழா பழைய தலைவர் லயன் கே. அமிர்தலிங்கம் தலைமையில் அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட லயன்ஸ் கழகப்] பிரதி மாவட்ட ஆளுநர் லயன் ஈ. விஜயரத்தினம் தமது பேருரையில் இப்படிக் கூறினார்.

லயன்ஸ் கழகப் பிரமுகர்களும் லியோ கழக இளைஞர்களும் யுவதிகளும் விழாவுக்குச் சமுகமளித்திருந்தனர்.

புதுவருட உத்தியோகத்தர்கள் பிரதி மாவட்ட ஆளுநர் லயன் விஜயரத்தினம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் பிரதமவிருந்தினர்''செயலாளர், பொருளாளர், ஏனைய இயக்குநர்கள் தலைவருடன் ஒன்றிணைந்து லயன்ஸ்கழகம் உச்ச நிலையடையத் தொழிற்படவேண்டும்,, என்று வாழ்த்தினர்.

தொடர்ந்து விழா புதிய தலைவர் லயன் வி. பி. தியாகராசா தலைமையில் நடைபெற்றது.


லயன் தியாகராசா தமது பதவி ஏற்புரையில் கூறியதாவது:

எனது கடமையிலிருந்துநான் தப்பிக்கொள்ள முடியாது. என் கடன் பணிசெய்து கிடப்பதே என்ற ரீதியிலே பணிசெய்ய கடந்தகால அனுபவமுதிர்ச்சிபெற்ற தலைவரும் உறுப்பினரும் என்னை வழி நடத்த வேண்டும்.

பெண்களுக்கு குடிசைக் கைத்தொழிற் பயிற்சி, இளைஞருக்கு கல்விக்கான உதவி, இளைருக்கு வேலைவாய்ப்பு, சுகாதாரசேவை, வீதித் திருத்தம், விளையாட்டு வளர்ச்சி, விபத்துக்களில் ஊனமடைந்தோர்க்கு இரத்ததானம் செய்தல், கண்சிகிச்சை முதலான செயற் திட்டங்களை ஏற்படுத்திச் சேவைசெய்தல் எனது வேலைத்திட்டங்களில் முக்கிய பங்கெடுக்கின்றன. இவைகள் பூர்த்தியாக உங்கள் உதவி வேண்டும்' இப்படிஅவர் கூறினார்.

லயன் பத்மநாதன், கோப்பாய் லயன்ஸ் கழகத்தலைவர் லயன் எஸ். கிட்ணர், லயன் (டாக்டர்) பிலிப்ஸ், லயன் கே. வி. முத்துக்குமாரசாமி, லயன் (டாக்டர்) ரி. சோமசுந்தரம், முன்னாள் தலைவர் லயன் கே. அமிர்தலிங்கம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். (ஒ-75)


புரோட்டீன் நிறைந்த
புரோட்டினெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டினெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டினெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை
ரூபா 68/55
125 இறும்

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## திருடனின் 'கெட்டித்தனம்'

குருநகர், ஆக. 23

'சைக்கிள்' திருடிய கள்வனைப் பிடித்து தண்டனை வழங்கியவர்கள் அனுதாபப்பட்டு உணவும் கொடுத்து படுக்கைக்கும் வசதி செய்தனர்.

விடிவதற்கு உள்ளாக அங்கிருந்த ரேடியோ, றெக்கோடரையும் எடுத்துக் கொண்டு திருடன் மாயமாக மறைந்து விட்டான்.

இச்சம்பவம் கடந்த புதனன்று யாழ். சின்னக்கடைப் பகுதியில் நடைபெற்றது.

திரும்பவும் பொம்மை வெளிப்பகுதியில் வைத்துப் பிடிக்கப்பட்ட திருடனுடன் தப்பிச் செல்வதற்கு உதவிய இன்னொரு கள்வனும் அகப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

அவர்களிடமிருந்து பொருள்கள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ- 51)

## ஓய்வு பெறுகிறார்

யாழ்ப்பாணம் ஆக 23

யாழ். செட்டித்தெரு ம. மி. த. க வித்தியாலயத்தில் கடந்த நான்கு வருடங்களாக அதிபராக கடமையாற்றிய திரு. மு. கனரகத்தினம் தமது பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார். (ஒ - சி)

## புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம் ஆக-23

வடபிராந்திய மினி பஸ் சேவை சங்கம் இருபாலை கிழக்கிலிருந்து யாழ் நகருக்கு புதியபஸ் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

வடபிராந்தியமினிபஸ் சேவை சங்கத்தின் உபதலைவர் வனிதா-மகேந்திரன் எடுத்துக்கொண்ட நடவடிக்கை காரணமாக இப்புதிய சேவை ஆரம்பிக்கப்பட்டது. (ஒ)

## சேமலாப நிதித்திட்டத்தின் கீழ் வீடமைப்புக் கடனுக்கு நூறு கோடி ரூபா ஒதுக்கீடு

### அக்டோபர் முதல் வழங்கப்படும்

கொழும்பு, ஆக 23

தொழிலாளர் சேமலாப நிதித் திட்டத்தின் கீழ் வீடமைப்புக் கடன் வழங்குவது எதிர்வரும் அக்டோபரில் இருந்து ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

இதற்காக தொழிலாளர் சேமலாப நிதித் திட்டத்தில் இருந்து நூறு கோடி ரூபாவை ஒதுக்குவது என்று அரசு தீர்மானித்துள்ளது.

வீட்டைத் திருத்த அல்லது புதிதாக வீடு வாங்க அல்லது ஈட்டில் இருந்து வீட்டை மீட்க இக்கடன்வழங்கப்படும்.

அரச அடமானவங்கி, வீடு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் ஊடாக இக்கடன் வழங்கப்படும்.

சேமலாப நிதித்திட்டத்தின் கீழ் உறுப்பினராக உள்ளவர்கள், சேமலாப நிதியைப் பிணையாக வைத்து இக்கடனைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியர்கள், நிதித் திட்டத்துக்கு அளித்துள்ள பணத்தின் அளவை வைத்தே கடன் வழங்கப்படும் என்றும்-

பெறப்படும் கடன் சொல்லப்பட்ட காரியத்துக்கு பாவிக்கப்படுகிறதா என்பதைத் தெரிந்து கொள்ள சேமலாப நிதி சபை, சம்பந்தப்பட்ட கிராமசேவையாளரிடம் இருந்து அறிக்கையைக் கோரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ - எ)

## அம்பிலாந்துறை வாசிகள் இருவர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஆக. 23

மட்டக்களப்பில் முன்னாள் விஷேட சேவை அலுவலகர் உட்பட இருவர் அண்மையில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அம்பிலாந்துறை வாசிகளான இருவரின் சடலங்களும் கடுக்காமுனை வீதியில் மீட்கப்பட்டது.

எஸ். அருளம்பலம் (30), கே. பெரியதம்பி (24) ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்களாவர். (ஒ-21)

## விவசாய ஓய்வூதியம் ஒரு வரப்பிரசாதமாகும்

பருத்தித்துறை ஆக 23

விவசாயிகளின் வாழ்க்கை வசதிகளை வளம்படுத்தும் முகமாகவே விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது இத்திட்டம் விவசாயிகளுக்குக் கிடைத்த வரப்பிரசாதமேயாகும். விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் விவசாயிகள் சேர்ந்து தமது வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ளத் தவறக்கூடாது.

இவ்வாறு விவசாயிகள் ஓய்வூதியத்திட்டத்தில் சேர்ந்துள்ள புற்றளைப் பகுதி விவசாயிகளுக்கான பதிவுப்பத்திரங்களைக் கையளித்து உரையாற்றிய அம்பன் கமநல சேவைநிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. வி. இராசையா குறிப்பிட்டார்.

புற்றளை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு திரு. வே. ஆறுமுகம் தலைமை வகித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு. வி. இராசையா மேலும் குறிப்பிட்டதாவது;

''விவசாயிகள் ஊக்குவிக்கப்படும் போது விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபட முடியும்.

விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் சிறப்புறும் போதுதான் எமது பகுதிகளின் பொருளாதார அபிவிருத்திகள் மேம்பாடடையும். இளம் தலைமுறையினரான இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட இவ்வாறான திட்டங்கள் ஊக்குவிக்கும் என்றார்.

புலோலி தெற்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு கண. சண்முகநாதன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

எமது பகுதி விவசாயிகள் இன்று பல்வேறு வகையானபிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது. இவ்விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தகுந்த பரிகாரங்களைக் கண்டு அவர்களை விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்கமளிக்க வேண்டியது முக்கிய கடமையாகும். விவசாயிகளின் எதிர்கால வாழ்க்கை வசதிகளுக்காகவே விவசாயிகள் ஓய்வூதியத்திட்டம் அமுலுக்குக்கொண்டுவரப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது என்றார். (ஒ-118)

## சிறுவர்களுக்கு தடுப்பு மருந்து

மானிப்பாய் ஆக 22

சிறுவர்களுக்கு ஏற்படும் குக்கல், தொண்டைக்கரப்பன்சிறுபிள்ளைவாதம் போன்ற நோய்களுக்கான தடுப்பு மருந்து ஒவ்வொரு திங்கட்கிழமையிலும், ஓய்வுநாட்களிலும் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வழங்கப்பட்டு வருகின்றது. (ஒ-90)


## 6ஆவது மாத நினைவஞ்சலி



அமரர் நாகமுத்து செல்லையா

தோற்றம்: 14 - 4 - 1923

மறைவு: 27 - 2 - 1988

திதி: 1988 - 8 - 23

அன்பினல் நோக்கி எமை
ஆசையாய் அரவணைத்து வாழ்வில்
என்றுமே கடிந்திடாது
இமைப் பொழுது அகன்றிடாத
பண்பினைப் போற்றுகின்றேம்
பாசத்தின் நினைவால் - இன்று
வெம்பிடும் நெஞ்சமாக
வேதனை அடைந்தோம் ஐயா
சடுதியில் சென்றதென்ன
சாவென்ற பெயரில் - எமை
விரைவினில் பிரிந்த தென்ன
வினைவினைத் தாங்குவோமா
விதியினைத் தாக்குவோமோ

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சாவகச்சேரி வடக்கு,
மடத்தடி.

(5886)


## 'எங்கேயோ விலை போனவர்கள்'

## நெடுஞ்செழியன் அணி மீது எஸ். டி. எஸ். குற்றச்சாட்டு

காஞ்சிபுரம், ஆக 23

'நெடுஞ்செழியன் அணியினர் யாருக்கோ எங்கோ விலைபோய் விட்டனர். யாரிடமோ அச்சாரம் வாங்கிவிட்டனர், என்று எஸ். டி. சோமசுந்தரம் கூறினர்.

காஞ்சிபுரத்தில் அ. தி. மு.க.(ஜெ) கூட்டம் நடந்தது. கூட்டத்தில் ஸ்ராலின் தலைமைதாங்கினர். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு எஸ். டி. சோமசுந்தரம் பேசியதாவது;

நெடுஞ்செழியன் அணியினர் ஜெயலலிதாவிடம் கணக்கு கேட்கின்றனர். கணக்கை கேட்க வேண்டிய இடத்தில் முறைப்படி கேட்டால் கணக்கு காண்பிக்கப்படும். இதைவிடுத்து பத்திரிகையில் அறிக்கை கொடுத்தால் பத்திரிகை மூலம் வரவு செலவு கணக்கு காட்ட இது என்ன வியாபாரத்துறையா?

எம். ஜி. ஆர். அப்போது தி. மு. க. வை. பார்த்து கணக்கு கேட்டது கட்சிக் கணக்கை அல்ல கருணநிதி மற்றும் நெடுஞ்செழியன் போன்றவர்களின் சொத்துக் கணக்கை தான் கேட்டார். இதற்கு பதில் சொல்லாமல் அன்று எம். ஜி. ஆரை வெளியேற்றிய இதே நெடுஞ்செழியன், இப்போது ஜெயலலிதாவை கணக்கு கேட்கிருர். இது என்ன நியாயம்? திருடன் பணத்தை திருடிக் கொண்டு ஓடும் போது தன்னை யாராவது பிடிக்கப் போகிருர்களோ என்று அவனே திருடன், திருடன் என்று கூறிக் கொண்டு ஓடுவது போல உள்ளது நெடுஞ்செழியன் செயல்.

உண்மையில் ஜெயலலிதா மற்றத் தலைவர்களை மதிப்பதில்லை என்ற குற்றச்சாட்டுகள் உண்மையானதாக இருந்தால் ஜெயலலிதா அழைத்தபோது வந்து இருக்க வேண்டும். இவர்கள் ஏன் வரவில்லை இவர்கள்எங்கோ,யாருக்கோ விலை போய்விட்டார்கள் யாரிடமோ அச்சாரம் வாங்கிவிட்டார்கள்.

தூங்குகிறவனை தட்டி எழுப்பி விடலாம். தூங்குபவனைப் போல நடிப்பவனை எழுப்ப முடியாது. ஒரு பெண் தன் கணவன் கட்டிய தாலியை அறுத்து எறிந்து விட்டு கள்ளக்காதலனைப் பார்த்து, நான் உனக்கு மட்டுமே சொந்தம், நான் எனது தாலியை கழட்டி எறிந்து விட்டேன் பார்' என்றுளாம். கணவனிடம் பேசும்போது நீ கட்டிய தாலியை கோபத்தில் கழட்டி எறிந்ததும் நான் உன்னுடனே வாழ்கிறேன் பார், சொன்னளாம் தற்போது நெடுஞ்செழியனும் அவரது ஆதரவாளர்களுக்கும் இந்த பெண்ணுக்கு சமம் ஆனவர்கள்.

## 4 வீடுகளில் புதுமுறையான திருட்டு முயற்சி

கோப்பாய், ஆக,23

கடந்த வியாழன் இரவு 12 மணியிலிருந்து 2மணி வரையானநேரத்தில் பருத்தித்துறை வீதியின் அருகில்அமைந்துள்ள நான்கு வீடுகளில் திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. திருடர்கள் மெயின் பூயூசை கழற்றி விட்டு வீட்டிலிள்ளவர்களை பல முறை அழைத்தனராம். அவர்கள் வெளியில் வராததால் ஜன்னல்களின் கண்ணடியை உடைத்து கம்பியை வளைத்து உள்ளே புக முயன்றனராம். வீட்டில் உள்ளவர்கள் சத்தம் போடவே அவர்கள் ஓடிவிட்டனராம்.

இச்சம்பவங்கள் இடம் பெற்ற இடத்திலிருந்து சுமார் 300 யார்தொலைவில் அமைதிப் படையினரின் சென்றி இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ- 72)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

சுழிபுரம், ஆக. 23

மூளாய் கூட்டுறவு ஐக்கிய வைத்தியசாலைச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மூளாய் கூட்டுறவு ஐக்கிய வைத்தியசாலைச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-ரி)

## ஆசிரியர் சங்கம் நன்றி தெரிவிப்பு

அச்சுவேலி, ஆக. 23

ஆசிரியர் சேவைக்கால முன் பயிற்சியை யாழ் நகரில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தமைக்காக இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர், யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர், கல்விச் சேவை ஆணைக்குழு ஆகியோருக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளது. (ஐ- 11)

## தடுப்பார் இல்லையா?

சுழிபுரம், ஆக. 23

சுழிபுரம் திருவடிநிலை கடற்கரைப் பகுதியில் களவாக மணல் அள்ளுவோரை தடுப்பார் யாரும் இல்லையா? என பொது மக்கள் அங்கலாய்க்கிருர்கள்.

இதனை உடன் தடுக்காது விட்டால் கடல் நீர் அருகிலுள்ள வயல்களிலும் குடிமனைகளிலும் புகுந்துவிடும் ஆபத்து நிலவுகிறது. (ஒ-ரி)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. ஆ. கார்த்திகேசபிள்ளை

(தெல்லிப்பாறிய புகையிரதநிலைய அதிபர்)

தோற்றம்: 26 8- 1925

மறைவு: 24- 7- 1988

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய் கடமையில் கண்ணியமாய் நேர்மையில் இலக்கணமாய் வாழ்ந்தீர்!

திடீரென எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே, குடும்பத்தின் ஒளிவிளக்கே, உங்கள் இனிய நினைவுகள் எம் நெஞ்சை விட்டு என்றுமே அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேம்.

அன்னரின் இறுதிச்சடங்குகளில் சமுகம் தந்து உதவிய உறவினர்களுக்கும், அயலவர்களுக்கும், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், மாமி,
பேரன் அருண்ருஜ்,
சகோதரிகள், மைத்துனர்கள்.

6ஆவது மைல்கல்
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(5858)


### எம். ஜி. ஆர். அரசை வீழ்த்தத் துணை போன

## பண்ருட்டி ராமச்சந்திரனை ஒழித்துக் கட்டுவேன்!

### வீரப்பன் சபதம்!!

சென்னை, ஆக23

'எம் ஜி.ஆர். அரசை வீழ்த்த துணை போன பண்ருட்டி ராமச்சந்திரனை ஒழித்துக் கட்டுவேன்' என்று வீரப்பன் பேசினர்.

**பேச்சு**

சென்னை அருகே புழலில் எம்.ஜி ஆர். சிலை திறக்கப்பட்டது. இந்த விழா பொதுக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஆர். எம். வீரப்பன் கலந்து கொண்டு பேசினர்.

அவர் பேசியதாவது:

எம். ஜி. ஆர். ஆட்சியை வீழ்த்தலாம் என்று எண்ணிக்கொண்டு வந்த காங்கிரஸ்காரர்கள் துரோகிகள் இன்றைக்கு, எங்கே இருக்கிறார்கள் என்று தேடும் நிலையில் இருக்கிருர்கள். துரோகிகள், இன்றைக்கு அவர்களுக்குள்ளேயே குடுமிபிடி சண்டை நடத்திக் கொண்டு இருக்கிருர்கள். இவர்கள் எப்படி அழியப் போகிருர்கள் என்பதை நான் விளக்கத்தேவை இல்லை. நாடு வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறது. எதிர் வீட்டு ஜன்னலை எட்டிப் பார்க்கும் பழக்கம் நமக்கு வரக் கூடாது.

**யார் குடுமி, யார் கையில்?**

அங்கே யார், யார் குடுமியைப் பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள் [illegible] பற்றிக் கவலை இல்லை. ஆண் குடுமியை பெண் பிடித்து இருக்கிறதா? பெண் குடுமியை, ஆண் பிடித்திருக்கிறதா? நமக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை.

**ஒழித்து கட்டுவேன்**

எம்.ஜி.ஆர். அரசை வீழ்த்தியவர்கள், வஞ்சகம் விரித்தவர்கள்-சுயநல எண்ணத்தோடு இருப்போர்! அவர்களை, எதிர்த்துக் களத்தில் நிற்கிறேம். அவர்களுக்குத் துணை வந்தார்களே துரோகிகள்.(பண்ருட்டி-நெடுஞ்செழியன்) அவர்களை ஒழித்து விட்டுத் தான் மறுவேலை என்று தான் களத்தில் நிற்கிறேம்.

இவ்வாறு அவர் பேசினர். (எ-4)

## 5 யுவதிகளுக்கு இலவசமாக தையல் மெஷின்

பருத்தித்துறை, ஆக. 23

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினுல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சுயதொழில் வாய்ப்பு நடவடிக்கைகளின் முதற்கட்டமாக ஐந்து யுவதிகளுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் 22 ஆயிரம்ரூபா பெறுமதியான (ஒன்று 4, 390/-) ஐந்து புதிய தையல் இயந்திரங்களை இலவசமாக வழங்கியுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா வோச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்த இதனைத் தெரிவித்துள்ளார். (ஒ- 118)


## 90ஆம் நாள் நினைவஞ்சலி



க. பிரபாகரன் (அப்பன்)

(கோண்டாவில் பிராந்திய பொறுப்பாளர்)

மண்ணில் ஜனனம்: 01-6-1969

மண்மீட்பில் மரணம்: 25-05-1988

கோரங்கள் கண்டு கொதித்து
கொள்கைக்காகவே துடித்து
வீட்டினை உறவினைப் பிரிந்து
விடுதலை நெருப்பினைச் சுமந்து
வீரம் விளைகின்ற ஈழமண்ணில்
விடுதலை படைக்கக் காத்திருந்த
அப்பனே! உன்னை இழந்தமோ?
கண்ணிலும் இனிய சுதந்திரம் மறந்து
கைகட்டி அவர்முன் கணமும் நிற்பமோ?
அச்சமுற்று அடிமையாய் வாழ்வதிலும்
துச்சமே உயிரெனத்தூக்கி எறிந்தனை!
நெஞ்சகத் தருக்குடை நின் எதிரிகளை
நேருக்கு நேராய் நின்றெதிர்த்தாயே!
வேங்கையே! உன்னை தூங்கிடச் செய்த
அவர்களை வேரோடறுப்போம்!
கொன்றிடுதே உன்னிழப்பு எனினும்
வென்றிடுவோம் அடக்குமுறையாளர்களை
மறப்போரதனில் மரணித்துப்போனுலும்
மக்கள் மனங்களில் என்றும் வாழ்வாய்
ஈழதாகம் இதயத்தில் சுமந்து உன்
இலட்சியப் பாதையில் தொடர்வோம்
புவியினோர் அறிந்திடப் புதுயுகமீட்டிடு
வோம்.

உன் வழி தொடரக் காத்திருக்கும்:
—நண்பர்கள்—

(5873)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

**பொருள்:**
முயற்சி செய்து தேடாமலே தரும வளத்தை உடைய நாடுகளைச் சிறந்த நாடுகள் என்று கூறுவர்; தேடி முயன்றால் வளம் தரும் நாடுகள் சிறந்த நாடுகள் அல்ல.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
23-08-1988 * பெ இல. 23

## ஒருமித்த ஆதரவு தேவை

**பூஸா** இராணுவத் தடுப்பு முகாமில் ''வாழும்'' தமிழ் அரசியற் கைதிகள் கடந்த ஒன்பது நாட்களாக உண்ணாவிரதம் அனுஷ்டிக்கிறார்கள். சிறை வாழ்விலிருந்து தமக்கு விடுதலை கோரி அவர்கள் இந்தச் சாத்விகப் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள்.

தடுப்பு முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் சிறையிடப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் ஏற்கனவே பலதடவைகள் சாத்விகப் போராட்டங்களை நடத்தியவர்கள்.

அந்தப் போராட்டங்களைக் குறுக்கு வழியில் முறியடித்தும், ஒரு சில சலுகைகளை வழங்குவதாக உறுதிமொழி அளித்து முறியடித்தும் வந்தது இலங்கை அரசு.

எனினும் உண்ணாவிரதம் என்ற ஆயுதத்தைத் தவிர சிறந்த ஆயுதம் இல்லாத காரணத்தால், அரசியல் கைதிகள் அதனையே மீண்டும் தெரிவு செய்ய வேண்டியதாயிற்று.

அரசியல் கைதிகளுக்கு வழங்கப்படும் சோற்றில் அரைவாசி கல், பதம்கெட்ட இறைச்சி வகைகளில் சகதி. அழுகிய, சழித்துவிட்ட, முற்றிய வெண்டிக்காய், பூசினிக்காய், போஞ்சி, கரட், வாடி வதங்கிய பொன்னாங்காணி என்பன கைதியின் தட்டில் கறிகளாக உருமாறி இருக்கும் பரிதாபம். தேநீரில் அளவுக்கு அதிகமான சக்கரின். இவற்றின் விளைவாக அவர்களுக்குப் பொல்லாத வியாதிகள்; கடியும் சொறியும் என்று ஏகப்பட்ட நோய்கள் மனிதர்களாகப் பிறந்து மாக்களாக நடத்தப்படும் அக்கிரமம், அநியாயம், அங்கு!

இலங்கை-இந்திய ஒப்பந்தம் 1987 ஜூலையில் கைச்சாத்திடப்பட்டதை அறிந்து, தமக்கு விடிவு ஏற்படும் என அரசியல் கைதிகள் கனவு கண்டார்கள். சிலருக்கு மட்டும் 'அதிர்ஷ்டம்' கிடைத்தது- மற்றவர்கள் இன்னும் சிறைக் கூடங்களில் பூட்டி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொடுத்த போதிலும், ஒரு சிலர் விடுவிக்கப்பட்டார்கள்; மற்றும் பலர் இன்னும் உள்ளே இருக்கிறார்கள்.

அதனால் இனியும் சகிக்க முடியாத கட்டத்தில்—

ஒன்றில் சிறை வாழ்வில் இருந்து மீட்சி பெற வேண்டும்; இல்லையேல் செத்துவிட வேண்டும் வரையறை இல்லாது வாடி வதங்கும் வாழ்க்கை இனிப்போதும் என்ற நிலையில்—

பூஸாவில் உள்ள 454 தமிழர்கள் உண்ணாவிரதத்தைத் தமது ஆயுதமாக ஏந்தியுள்ளார்கள்.

சுழற்சி முறையில் நடக்கும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முறியடிக்க, பயன் இல்லாததாக்கி விட அரசு வட்டாரங்கள் சூழ்ச்சித் திட்டங்களை வகுக்கக் கூடும். இது முந்திய பாடம்.

தங்கள் உண்ணாவிரதப் போராட்டம் வெற்றி பெற, வெளியில் உள்ள பொது மக்கள் ஆதரவு தேவை என்பதே தமிழ் அரசியல் கைதிகளின் விருப்பமாக இருந்தது.

அந்த விருப்பத்தை உணர்ந்து, வடக்கு, கிழக்குப் பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக்குழு, இம்மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரதம் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்திருக்கிறது. தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படும் வரை சுழற்சி முறையில் இந்தப் போராட்டம் நடக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரசைகள் குழுக்களின் முன்மாதிரியைப் பின்பற்றி, நகரம் நகரமாக, கிராமம் கிராமமாக, பட்டிதொட்டி எங்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி உண்ணாவிரதப் போராட்டம் நடக்க வேண்டும்.

மக்கள் எழுச்சிக்கு உள்ள சக்தி வேறு எதற்கும் இல்லை. இராணுவ அடக்குமுறையைக்கூட ஒன்றுபட்ட மக்கள்எழுச்சியால் வெல்லலாம்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி வடக்கு, கிழக்கு எங்கும் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தால், மக்கள் ஆதரவளித்தால், அசையாத இலங்கை அரசும் அசையலாம். ஆகக்குறைந்தது உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளுக்கு ஓர் ஆன்மபலத்தைக் கொடுக்கவாவது அது நிச்சயம் உதவும்.

எனவே, அரசியல் கைதிகளின் விடுதலை தமிழர்களின் பொதுவான பிரச்சினை என்பதை மனதில் இருத்தி, எல்லோரும் திரிகரண சுத்தியுடன் வெளியில் நடக்கும் உண்ணாவிரதப் போருக்கு ஆதரவளிப்பதும் கலந்து கொள்வதும் அவசியம். இந்த விடயத்திலாவது கருத்து வேறுபாடுகளுக்கு இடம் கொடுக்காது, ஓர் மனிதாபிமானப் பிரச்சினையாகக் கருதி எல்லோரும் ஒருமித்து ஆதரவு காட்ட வேண்டும்.

# சுதந்திர பலஸ்தீனம் பிரகடனம் செய்வதா?
## அரபாத் தலைமையில் தேசிய சபை விவாதம்

டுனிஸ், ஆக 22
இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் தனியான பலஸ்தீன நாடொன்றைப் பிரகடனப்படுத்தும் திட்டம் ஒன்று பற்றி பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தேசிய சபை தனது விவாதத்தை இன்று ஆரம்பித்தது.

டுனிஸியாவின் தலைநகர் டுனிஸில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தேசிய சபை நடைபெறுகின்றது.

தேசிய சபையில்சுமார் 700 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

எகிப்தைச் சேர்ந்த காஸா பிரதேசமும் ஜோர்தானுக்குரிய மேற்குக்கரைப் பிரதேசமும் 1967 யுத்தத்தில் இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்டது.

இதனிடையில், பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா சமரசத்திட்டம் ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

ஜெருசலத்தைத் தலைநகராகக் கொண்டு பலஸ்தீனியருக்கு ஒருநாடும் இஸ்ரவேலியருக்கு இஸ்ரவேலும் அமைய வேண்டும் என்பதே அத்திட்டமாகும். [எ]

### ஹுசேன் டுபாய் விஜயம்

டுபாய் ஆக 22
ஜோர்தான் மன்னர் ஹுசேன் டுபாய் சென்றார்.
ஐக்கிய அரபு எமிரேற்சு அமீர் மன்னரை வரவேற்றார். (எ)

**வெளி உலகில்**

## வளைகுடா நிலைமை

ஐ.நா, ஆக 22
யுத்த நிறுத்தம் சரியான முறையில் அமுல் நடத்தப்பட்டு அமைதி திரும்பினால் வளைகுடாவில் இருந்து தனது யுத்தக் கப்பல்கள் முழுவதையும் விலக்கிக்கொள்ளப்போவதாக சோவியத் யூனியன் அறிவித்திருக்கின்றது.

அமெரிக்க அரசோ தனது யுத்தக் கப்பல்களின் ஒரு பிரிவையே திருப்பி அழைக்கப் போவதாக தெரிவித்திருக்கிறது. (எ)

## செக்கோஸ்லேவேகியாவில் 10 லட்சம் பேர் பேரணி

பிராக், ஆக 22
செக்கோஸ்லேவேகிய தலைநகரில் நேற்று பத்து லட்சத்துக்கு அதிகமான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

20 ஆண்டுகளுக்கு முன்னர் சோவியத் ராணுவம் செக்கோஸ்லவேகியாவை ஆக்கிரமித்ததைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (எ)

## ஒரு கட்சி ஆட்சிமுறை தொடரும்; பர்மாவின் புதிய தலைவர் அறிவிப்பு

ஒரு கட்சி ஆட்சி முறையை மாற்ற முடியாது என்று பர்மாவின் புதிய ஜனாதிபதி மொங் மொங் அறிவித்தார்.

அரசுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் திரு. மொங் மொங் பேசினார்.

அப்போதே மேற்சண்டவாறு குறிப்பிட்டார்.

இதனிடையில் பல கட்சி ஆட்சிமுறை கோரி எதிர்ப்பாளர்கள் நாடு எங்கும் கிளர்ச்சி நடத்தி வருகின்றனர்.

பலபாகங்களில் இருந்து எதிர்ப்பாளர்கள் ரங்கூன் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர் என்று செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை, நகரினுள் பிரவேசிக்கும் எல்லாப் பாதைகளிலும் அரசுப் படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. (எ)

## கட்டுப்பாட்டை இழந்த சோவியத் விண்கலம்!

பொன், ஆக. 22
கட்டுப்பாட்டை மீறி வானில் சுழன்று திரியும் சோவியத் செயற்கைக்கோள் பூமியில் விழுவதற்கு முன்னர் அதனுள் இருக்கும் அணு சக்தியில் இயங்கும் ஜெனரேட்டர் வெளியே தூக்கி வீசப்பட்டு விடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஜெர்மனில் உள்ள சோவியத் தூதரக அதிகாரி இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

1987 அக்டோபரில் வானுக்கு ஏவப்பட்ட அணு சக்தியில் இயங்கும் கொஸ்மோஸ் 1900 செயற்கைக்கோள் இந்த ஏப்ரலில் நிலக்கட்டுப்பாட்டை இழந்துசெயற்பட்டு வருகிறது.

அடுத்த மாதம் இக்கோள் பூமியில் விழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# கட்சி அடிப்படையில் பொதுத் தேர்தலா? உயர் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்பேன்
## என்கிறார் பாகிஸ்தான் அதிபர்

இஸ்லாமபாத், ஆக. 22
நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் சுதந்திரமானதாக நியாயமானதாக அமையும் என்று பாகிஸ்தான்பதில் அதிபர் குலாம் இஷாக் கான் நேற்றுத் தெரிவித்தார்.

அதிபர் ஸியாவின் மறைவின் பின்னர் பதில் அதிபர் குலாம் கான் கலந்து கொண்ட முதலாவது செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

திட்டமிட்டபடி பொதுத்தேர்தல் நவம்பர் 16 ஆம் திகதி நடத்தப்படும். ஆயுதப்படையினர் தேர்தல் அலுவலகங்களில் தலையிட அனுமதிக்கப்பட மாட்டாது.

தேர்தல் குறித்து எதிர்க்கட்சிகளுடன் பேச்சுக்கள் நடத்தத் தயாராக இருக்கின்றேன்.

அரசமைப்புச் சட்டத்திற்கு அமைய தேர்தல் நடத்தப்படும். தேர்தல் கட்சி அடிப்படையில் நடத்தப்பட வேண்டுமா? இல்லையா? என்று சுப்ரீம் கோர்ட் தீர்மானிக்க வேண்டும். அதனை நான் ஏற்றுக்கொள்வேன்.

பாகிஸ்தானின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் செய்யப்பட மாட்டாது.

ஆப்கனிஸ்தான் சம்பந்தமான ஜெனிவா உடன்பாட்டை பாகிஸ்தான் தொடர்ந்து கௌரவிக்கும் இப்படி பதில் அதிபர் குலாம் இஷாக் கான் தெரிவித்தார். (எ)

## 'செக்'கில் ஆர்ப்பாட்டம்

இருபதாண்டுகளுக்கு முன்னர் செக்கோஸ்லேவேகியாவை சோவியத் துருப்புக்கள் ஆக்கிரமித்த நினைவு தினத்தை ஒட்டி மாஸ்கோவில் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை பொலிஸார் தடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தை ஜனநாயகயூனியன் என்ற அமைப்பு நடத்தியது.

கிரெம்ளின் மாளிகையில் இருந்து அரைமைல் தொலைவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் தடுத்து நிறுத்தப்பட்டது.

சோவியத் அரசு அண்மையில் பிறப்பித்த புதிய சட்டத்தின்படி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்துவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும்.

இதை மீறுவோருக்கு நீதிமன்றம் 15 நாள் சிறைத் தண்டனை, 500 பவுண் அபராதம் ஆகியன விதிக்கும். (எ)

### சமய சந்நிதிகளில்

### ஆவணி மூல அபிஷேக விழா

மட்டுவில் ஸ்ரீ மகாமுத்துமாரி அம்மன் ஆலய ஆவணி மூல அபிஷேக விழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் மேற்படி ஆலயத்தின் தர்மபரிபாலகர் அமரர் பொன் தாமோதரம் பிள்ளையினது நினைவு நிகழ்ச்சியும் இடம் பெறவிருக்கிறது

ஆலய வழிபடுவோர் சபை சார்பாக திரு. கா. சிவபாலன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (ஐ 31)

### கும்பாபிஷேகம்

மைதடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் 9 மணிவரை நடைபெறவுள்ளது.

ஆரம்ப கிரியைகள் கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றன. (உ-சி)

### சங்காபிஷேகம்

மண்டைதீவு சிவ உக்கிர வீரபத்திர சுவாமி ஆலய வருடாந்த சங்காபிஷேகம் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை ஆலய பரிபாலன சபை மேற்கொண்டுள்ளது.

கிரியா நிகழ்ச்சிகள் 29 ஆம் திகதி காலையில் ஆரம்பமாகும்.

பிரம்மஸ்ரீ இ. குமாரசுவாமிக் குருக்கள் தலைமையில் இச் சங்காபிஷேக நிகழ்ச்சிகள் இடம் பெறவிருக்கின்றன.

### பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில்

நாட்டில் அமைதி சமாதானம் ஐக்கியம் வேண்டி மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூரத்தன்று 1008 சங்காபிஷேகம் செய்து மக்கள் பிரார்த்தனை செய்தனர்.

மருதடிப் பிள்ளையார் கோவிலில் இருந்து புறப்பட்ட பாதபஜனைக் கோஷ்டியினரும் வந்து இதில் கலந்து கொண்டனர்.

சங்காபிஷேகம், விசேஷபூசை ஆகியவற்றைத் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்பட்டது.

சித்தாந்த பண்டிதர் திரு. கு. வி. மகாலிங்கம் அருளுரை வழங்கினார். (இ-31)

### அடகு நகைகளுக்கு சலுகை வட்டி விதம்

கொழும்பு, ஆக. 23
வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் நகைகளை அடகுவைத்து அவற்றை மீளப்பெற முடியாதவர்களுக்கு ஒரு சில சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

1988 ஜனவரி முதல் அடகு நகைகளுக்காக அறவிடப்படும் வட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் 1984 ஜனவரி மாதம் முதல் 1988 ஜனவரி வரை இருபது சதவீத வட்டி அறவிடப்படும்.

[illegible] (ஐ)

# இரவுநேர மீன்பிடித்தலுக்கு குருநகர் பகுதியில் தடை

குருநகர், ஆக. 23
குருநகரில் இருந்து இரவு நேரம் மீன் பிடிக்கச் செல்வதை இந்திய அமைதிகாக்கும் படையினர் கடந்த புதன் கிழமை முதல் தடைசெய்துள்ளனர்.

ஏனைய பகுதிகளில் தரித்து நிற்கும் - குருநகரைச் சேர்ந்த இயந்திரப் படகுகளை-கடந்த புதன் கிழமைக்கு முன்பாக குருநகருக்குக் கொண்டு வருமாறு மீனவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் குறிப்பிட்ட எண்ணிக்கையான படகுகள் இன்னமும் குருநகர் இறங்குதுறைக்குக் கொண்டுவரப்படவில்லை என்று தெரிய வருகிறது.

இரவு நேர மீன் பிடித்தல் தடை செய்யப்பட்டு உள்ளதால் இப்பகுதி மீனவக் குடும்பங்கள்மிகவும் கஷ்ட நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளன.

மேலும் கடல் உணவுக்கு பெரும் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது.

வேறு பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படுகின்ற மீன், றால், நண்டு வகைகள் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. (உ-31)

## ஊழியர்கள் சம்பளம் பெற முடியாது கஷ்டம்

வடமராட்சி, ஆக. 23
மாதாமாதம் குறிப்பிட்ட ஒரு திகதியில் சம்பளப்பணம் பெற்று வந்த பருத்தித்துறை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தற்போது ஒருமாதம் கடந்தும் சம்பளம் பெற முடியாமல் கஷ்டமடைகிறார்கள்.

தற்போது பருத்தித்துறை போக்குவரத்துச் சபைக்கும், இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்கும் உள்ள தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாலேயே மேற்படி கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு பருத்தித்துறை டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் தற்போது 'டீசல்' தட்டுப்பாட்டுக்கு மத்தியிலும் சேவையில் ஈடுபட்டுள்ள பஸ்களின் வருமானத்தைக் கொண்டே ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றது.

அதுவும் குறிப்பிட்ட திகதியோ மாதமோ அல்லாமல் குலுக்கல் சீட்டு மூலம் குறிப்பிட்ட ஒரு எண்ணிக்கையினருக்கு வழங்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ- சி- 160)

### புதிய பாதையில் பஸ் சேவை

பருத்தித்துறை ஆக 23
யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் ஆகிய வடபிராந்திய போக்குவரத்துச் சபைகளின் முத்தையன்கட்டுக்குச் செல்லும் பஸ்வண்டிகளை முத்தையன் கட்டு இடதுகரை விவசாயிகளின் நன்மை கருதி முத்தையன்கட்டு இடதுகரைவரை அனுப்ப வேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

ஒட்டுசுட்டான் சமநல சேவைக் குழுவின் சிபார்சை முல்லைத்தீவு மாவட்ட சமநல சேவைஉதவி ஆணையாளர் திரு. செ. பஞ்சலிங்கம் வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளார். (ஐ-118)

**நல்லூரா உற்சவ காலத்தில்**

## இறைவழிபாட்டுக்கு மாசு ஏற்படும் வகையில் நடக்காதீர்
### இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள்

வேலணை, ஆக 23
நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவத்திற்கு வருகை தரும் அடியார்கள் இறைவழிபாட்டு நோக்கங்களுக்கு மாசு ஏற்படாத முறையில் [illegible] வேண்டும்.

[illegible] இந்து இளைஞர் பேரவை இவ்வாறு [illegible] விடுத்துள்ளது.

அடியார்கள் அளவுக்கு அதிகமான தங்க நகைகளை அணிவதைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் ஆலயத்தினுள் திருடர்கள் வருகையைத் தடுக்க முடியும் என்றும் அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## சேகம் காக்க எழுவாய் நீயே!

அஞ்சேல் என்றபயம் அளித்தமரர் வாழ
அசுரர்தனைக் கொன்று புகழ் கண்டவன் நீ
கொஞ்சுதமிழ்க் கிழவி ஔவை கவிதை
கேட்க
குறும்புசெய்து கனிவழங்கி மகிழ்ந்தவன் நீ
நெஞ்சுநிறை நினைவோடு
துதிப்போர்க் கென்றும்
நிறைவான அருள்புரியும் இறையேஎங்கள்
பிஞ்சுகளின் மனவுறுதி கண்ட பின்னும்
பேசாது முறுவலித்தல் நியாயமாமோ?

தஞ்சமென்று வந்தோர்க்கு அபயம் நல்கும்
தமிழ்கூறும் உலகின் முதற் கடவுளும் நீ
வஞ்சி தெய்வானை யுடன் வள்ளி சேர
வண்ண மயில்மீது வலம் வருவோனும் நீ
அஞ்சாத மாவீரன் சங்கிலியன்
ஆட்சி செய்த தலைநகராம்
நல்லூர் தன்னில்
செஞ்சேவற் கொடிகைவேல்
படைகள் சூழச்
செகம்காக்கத் தமிழ்காக்க எழுவாய் நீயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயன்

23 - 08 - 1988 செவ்வாய்க்கிழமை




★ வடக்கு, கிழக்கு

## மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல்

கொழும்பு, ஆக 23

வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பற்றி அரசு தலைமைப்பீடம் ஆராய்ந்து வருவதாக அறியப்படுகிறது.

இம்மாதம் 29 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கும் என்று அதிகாரபூர்வ அமைச்சு வட்டாரம் ஒன்று தெரிவித்தது. பிந்திய அரசியல் நிலவரப்படி ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் பிரேமதாஸ ஏகமனதாக தெரிவு செய்யப்படுவார் என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபகுதி வாக்காளர் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்காவிட்டாலும் அங்கு வாக்களிப்பு நிலையங்கள் வைக்கப்பட வேண்டும் என்று அரச வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

ஜனாதிபதி தேர்தல் நாடு முழுவதும் அரசமைப்புச் சட்டப்படி நடத்தப்பட்டது என்பதை காண்பிக்கவே இந்த ஏற்பாடு என்றுமேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

### பூமியதிர்ச்சியினால் பங்களாதேஷில் 50 பேர் பலி

டாக்கா, ஆக 23

பூமியதிர்ச்சி காரணமாக பங்களாதேஷில் ஐம்பது பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

யமுனா நதியில் 4 நாட்டுப் படகுகளில் இவர்கள் பயணஞ் செய்து கொண்டிருந்தபோது பூகம்பம் ஏற்பட்டது. அப்போது பேரலை ஒன்று ஏற்பட்டு படகுகளை மூழ்கடித்தது.

(உ-எ)

### குடா....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்லும் சகல வாகனங்களும் பறிமுதல் செய்யப்படும்.

கொழும்பிலிருந்து வரும் வாகனங்கள் யாழ்ப்பாணத்தில் எரிபொருளை மீண்டும் நிரப்பிக் கொள்ளாமலேயே அநுராதபுரம் செல்லும் வகையில் அவை கீழ் குறிப்பிட்ட அளவிலான பெற்றோலியப் பொருட்களை கொண்டு செல்ல அனுமதிக்கப்படும்.

★ மோட்டார் சைக்கிள்/ஸ்கூட்டர்கள் 8 லீற்றர் பெற்றோல்.

★ கார்கள் - 20 லீற்றர் பெற்றோல் அல்லது 16 லீற்றர் டீசல்.

★ மினி பஸ்கள் 20 லீற்றர் டீசல் அல்லது 25 லீற்றர் பெற்றோல்.

★ பஸ்கள் - 20 லீற்றர் மாத்திரம் (ஒரு தாங்கி நிரைய நிறப்பப்படும் டீசல் அவை திரும்பவும் அநுராதபுரம் போவதற்குப் போதுமானது).

பெற்றோலியப் பொருட்களைக் கொண்டு வருவதற்கான சகல நடவடிக்கைகளும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

ரயில் பாதை எவ்வளவு துரிதமாகத் திருத்தப்படுகிறதோ அதனைச் சார்ந்தே இந்த நடவடிக்கைகள் அமையும்.

—இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஒ-ஐ)

வடமாகாண

### கட்டட திணைக்கள ஊழியர்கள் 44 பேர் நிரந்தரமாக்கப்படுகின்றனர்

நாளை கொழும்பில் நியமனக் கடிதம்

யாழ்ப்பாணம், ஆக 23

வடமாகாண கட்டடத் திணைக்களத்தில் பணிபுரியும் 44 சமயாசமய ஊழியர்கள் நிரந்தர ஊழியர்களாக நியமனம் பெற்று உள்ளனர்.

பிரதமர் ஆர். பிரேமதாசாவின் 10 ஆயிரம் பேருக்கு வேலை வழங்கும் திட்டத்தின் அடிப்படையிலேயே இந்நியமனம் வழங்கப்படுகிறது.

பின்வரும் அடிப்படையில் 44 ஊழியர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் வடக்கு -18, யாழ்ப்பாணம் தெற்கு - 16, வவுனியா- 2, மன்னார் - 8

நிரந்தர நியமனம் பெறவிருக்கும் 44 ஊழியர்களுக்குமான ''நியமனக் கடிதங்கள்'' நாளை கொழும்பு மாநகரசபை மண்டபத்தில் வைத்து வழங்கப்படும்.

(ஓ-76)

### முத்துஜயன்கட்டில் புதிய இராணுவ முகாம்

ஒட்டுசுட்டான், ஆ 23

முத்து ஐயன் கட்டுத் திட்டத்திலுள்ள பெண்கள் குடியேற்றப் பகுதியில் நேற்று இந்தியப் படையினர் மினிமுகாம் அமைத்துள்ளனர்.

இதனால் இப்பகுதி குடியேற்றவாசிகள் இடம்பெயர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயங் குறித்து திட்ட முகாமையாருக்கும், பிரசைகள் குழுவுக்கும் முறையிடப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

(உ-113)

### இந்திய...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

னர் அரசு தேர்தலை நடத்த வேண்டும்.

இந்தியர்களின் அனுமதியின்றி மக்கள் அனுராதபுரத்தைத்தாண்டிச் செல்லமுடியாது

பயமின்றிச் சமாதனமாக வாழ, தற்போதுள்ள ஒரே வழிவாக்கைப் பயன்படுத்தி யு. என். பி அரசாங்கத்தை தூக்கி எறிவதே.

-இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ-எ)

### கொடிகாமத்துக்கு கடைசிபஸ் மாலை 4-30 க்கு

யாழ்ப்பாணம், ஆக 23

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமத்துக்கான கடைசி பஸ் சேவை மாலை 4-30 மணிக்கு நடைபெறும் என வடபிராந்திய போக்குவரத்துச்சபை அறிவித்துள்ளது.

மற்றைய சில பகுதிகளுக்கான போக்குவரத்துச்சேவை மாலை 5-15 வரைக்கும் நடைபெறும் பொழுது கொடிகாமத்துக்கான சேவை 4-30 மணியுடன் நிறுத்தப்படுவதால் பல அரச ஊழியர்கள் பெரும் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

### பரீட்சை

யாழ்ப்பாணம், ஆக. 23

வைத்தியசாலை ஆண் பெண் பரிசாரகர்களுக்கான பரீட்சை இந்த மாதம் 28ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எழுத்துப் பரீட்சை 28ஆம் திகதி யாழ் தாதிகள் பயிற்சிக் கல்லூரியிலும் —

செய்முறைப் பரீட்சை 30ஆம் திகதி தெல்லிப்பழை வைத்தியசாலையிலும் நடைபெறும்.

(உ-5)

### இயக்கச்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேசமயம் நேற்று இயக்கச்சி, பண்ணை, கோயில்வயல், சங்கத்தார்வயல் ஆகிய இடங்களைச் சேர்ந்த ஆண்கள் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டனர்.

(உ-144)

### தென்மராட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யூறும் விளைவிக்கவில்லை என்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று மாலை வரை மக்களின் அஞ்சலிக்காக பூதவுடல் பளை சந்தை மைதானத்தில் வைக்கப்பட்டிருந்தது.

பளைப் பகுதியில் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன

அரச அலுவலகங்களும் திறக்கப்படவில்லை

பளைப் பகுதி பாடசாலைகள் நேற்று திங்கட்கிழமை மூன்றும் தவணைக்காக மீண்டும் திறக்கப்படவிருந்தபோதிலும், மாணவர்கள் சமுகமளிக்காததினால் பாடசாலைகள் இயங்கவில்லை. (உ-10-144)

## ஆனையிறவுத் தடைமுகாமில் அம்புலன்ஸிற்கு முன்னுரிமை

யாழ்ப்பாணம், ஆக.23

கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் அம்புலன்ஸ் வண்டிகள் ஆனையிறவு தடுப்பு முகாமில் இனிமேல் மிகவும் குறுகிய அளவு நேரம் மாத்திரமே சோதனைக்கு உட்படுத்தப்படும்.

இதற்கான உடனடி நடவடிக்கைகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் அம்புலன்ஸ் வண்டிகள் ஆனையிறவு தடுப்பு முகாமில் வழமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவதால் நோயாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகவேண்டியிருக்கிறது.

இப்படியான அனுவசியத் தாமதங்களைத் தடுக்கும்முகமாகவே அம்புலன்ஸ் வண்டிகளுக்கு இந்தமுன்னுரிமை வழங்கப்படவிருக்கிறது.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கோ அல்லது யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கோ அம்புலன்ஸ் வண்டிகள் செல்லும்போது அவற்றில் பயணம் செய்யும் நோயாளர்கள், டாக்டர்கள், மற்றும் மருத்துவ உதவியாளர்கள் ஆகியோரின் பெயர்களையும் எண்ணிக்கையையும் உள்ளடக்கிய விபரப்பட்டியல் ஒன்றை சம்பந்தப்பட்ட மாவட்ட மருத்துவ அதிகாரியிடமிருந்து அம்புலன்ஸ் வண்டியில் செல்பவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

மேற்படி விபரங்களை அந்த மருத்துவ அதிகாரி பிரஸ்தாப பட்டியலில் உறுதிப்படுத்தியிருக்கவும் வேண்டும்.

மேற்படி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளோரைத் தவிர வேறு எவரும் அந்த வண்டிக்குள் இருக்கக்கூடாது. பிரயாணத்தின்போது அம்புலன்ஸ் வண்டியில் வேறு எவரையும் ஏற்றி இறக்கவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

ஆனையிறவு தடைமுகாமில் இந்த விபரப் பட்டியலைக் காண்பித்ததும் சோதனைகளில் எதுவித தாமதமும் இருக்காது அம்புலன்ஸ் வண்டி தொடர்ந்து செல்ல உடனே அனுமதி வழங்கப்படும்.

(உ-ஐ-5)

### யாழ் நகரில் வீதித் தடை!

குருநகர், ஆக. 23

யாழ். பிரதான வீதியில் 1ஆம் குறுக்கு வீதியைச் சென்றடையும் 'மில்க்பார்' சந்தியால் வாகனப் போக்குவரத்துக்கள் தடுக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதியால் செல்கின்ற வாகனங்கள் 2 ஆம் குறுக்கு வீதியால் திரும்பி சப்பல் வீதியை அடைந்து 1 ஆம் குறுக்கு வீதியால் மீண்டும் பயணத்தைத் தொடர்கின்றன. (உ-51)

தடிகள், பொல்லுகளால்

## பொதுமக்கள் மீது பலஇடங்களில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 23

கடந்த சிலநாட்களாக குடாநாட்டின் பலபகுதிகளிலும் பொதுமக்கள் தாக்கப்படுவதாகவும், துன்புறுத்தப்படுவதாகவும் முறையீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆங்காங்கே இடம்பெறும் சில அசம்பாவிதச் சம்பவங்களை அடுத்து அப்பகுதிகளில் நடமாடும் பொதுமக்கள் தாக்கப்படுகின்றனர். மினிபஸ்கள் : மற்றும் வாகனங்களில் செல்வோரும் கீழே இறக்கப்பட்டுத் தாக்கப்படுகின்றனர்.

தும்புக்கட்டைத் தடிகள், பொல்லுகள், பிரம்புகள் போன்றவற்றினால் பொதுமக்கள் தாக்கப்படுகின்றனர்.

இந்த தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருவதை அடுத்து பொதுமக்கள் மத்தியில் பெரும் பீதி உருவாகியிருக்கிறது. மக்கள் தமது நடமாட்டத்தைக் குறைக்கத் தொடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம், சச்சேரியடி, ஆனைக்கோட்டை, இணுவில், காரைநகர், மிருசுவில், எழுதுமட்டுவாள், கோப்பாய், வேலணை நவாலி வீதி, மூத்தவிநாயகர் கோயிலடி போன்ற பல பகுதிகளில் இந்தத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

(உ-10-51)

### படையினர்----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட அசம்பாவிதங்கள் குறித்தே இந்த மகஜர் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

பலாலியில் உள்ள இந்திய அமைதிப்படை பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே, யாழ் நகரக் கொமாண்டர் பிரிகேடியர் ஆர். ஐ. எஸ். காலோன் ஆகியோர் ஊடாக இம் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டது. (உ)

### முல்லைத்தீவிலும் எரிபொருள் இல்லை

ஒட்டுசுட்டான், ஆக 23

எரிபொருள் விநியோகத்திற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கிராமப்புறங்களில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முத்துஐயன்கட்டு பகுதியில் சிறுபோக நெல்லை அறுவடை செய்து விவசாயிகள் சூடு மிதிப்பதற்கு ட்ராக்ரர்களுக்கு டீசல் இல்லாமல் பெரும் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஆசிரியர்கள் தேவை

**CHEMISTRY, ZOOLOGY**

ஆகிய இரு பாடங்களை A/L வகுப்பிற்கு கற்பிக்க ஆசிரியர்கள் தேவை.
விபரங்களுக்கு நேரடியாகவோ தபால் மூலமோ உடன் தொடர்பு கொள்ளவும்.
(தங்கும் இடவசதியுண்டு.)

நிர்வாகி,
கிளிநொச்சி கல்வி நிலையம்,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

(5893)

### ஊறுகாய், மோர்மிளகாய் விற்பனை

ஆலய உற்சவ, தண்ணீர் பந்தல் தேவைகளுக்கு வேண்டிய தரமான ஊறுகாய், மோர்மிளகாய் ஆகியவற்றை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

★ சுதேசிய ஊறுகாய்ப் போத்தல் ஒன்றின் அறிமுக விலை ரூபா 15/— மட்டுமே.

மேற்படி பொருட்களை கடைகளுக்கு கமிஷன் அடிப்படையில் விநியோகம் செய்ய விரும்பும் விநியோகஸ்தர்கள் எம்முடன் தொடர்பு கொள்க.

எமது சபைக்கு பத்திரிகை முகவர்களாக செயற்பட போதிய முன் அனுபவம் உள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சமூக அபிவிருத்திச் சபை
140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[C/6307]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் 1988/89

இப் பல்கலைக் கழகத்தில் புதிய மாணவர்களைப் பதிவு செய்வதற்கான விபரங்கள் வருமாறு:-

மாணவர்கள் தமது பதிவிற்கான பின்வரும் ஆவணங்களுடன், பரீட்சைக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு கீழ்க் குறிப்பிட்ட திகதியின்படி நேரடியாகச் சமுகமளிக்கவும்.

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிப் பத்திரம்
2. பிறப்புச் சான்றிதழ் (மூலப் பிரதி)
3. பாடசாலை விடுகைப் பத்திரம்.
4. போட்டோ பிரதிகள் 7 (பாஸ்போட் அளவு)

**கட்டணங்கள்**

1. கலைப்பீட மாணவர்கள் பதிவுக் கட்டணமாக ரூபா 60/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
2. புவியியலை ஒரு பாடமாக எடுக்கும் கலைப்பீட மாணவர்களும், விஞ்ஞான, மருத்துவபீட மாணவர்களும் பதிவுக் கட்டணமாக ரூபா 110/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
3. கைநூலுக்கான கட்டணம் - மருத்துவம் - ரூபா 20/- விஞ்ஞானம் - ரூபா 15/-

| பயிற்சி நெறி | பதிவு செய்யும் திகதி | நேரம் |
|---|---|---|
| கலை | 29 - 8 - 88 | காலை 9. 00 - 12 00 |
| வணிகம்/முகாமைத்துவம் | 30 - 8 - 88 | காலை 9. 00 - 12 00 |
| விஞ்ஞானம் | 31 - 8 - 88 | காலை 9. 00 - 12 00 |
| மருத்துவம் | 01 - 9 - 88 | காலை 9. 00 - 12.00 |

மேற்கூறப்பட்ட திகதியில் பதிவு செய்யத் தவறிய மாணவர்கள் பதிவுசெய்யத் தவறியவர்களாகக் கருதப்படுவர்.

பதிவாளர்.

(C.6325)

உ
சிவமயம்

### ★ திருமணம் ★

அன்புடையீர்!

நிகழும் விபவ வருடம் ஆவணித் திங்கள் 12 ஆம் நாள் (28. 08. 88) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 20 மணிமுதல் 7.40 மணி வரையுள்ள கும்ப இலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| எமது புத்திரன் திருவளர் செல்வன் | எமது புத்திரி திருவளர் செல்வி |
|---|---|
| **தர்மபாலன்** அவர்களுக்கும் | **லங்காமணி** அவர்களுக்கும் |

பிரான்ஸில் உள்ள 32, Rue du Faubourg du Temple 75011 Paris (Metro Republique or Gon Court) மண்டபத்தில் திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயப்படுத்தியுள்ளார்கள் என்பதை அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்

திரு. திருமதி. க. சி. கயிலாசபிள்ளை
உயிரப்புலம், ஆனைக்கோட்டை.

திரு. திருமதி. செ. கதிர்காமு
ஏழாலை.

(5962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 23 08 - 1988 இல்
... (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Tuesday 23th August 1988